**செய்தி வெளியீடு எண் : 2359** **நாள் : 26.12.2022**

# மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பேத்தியும், தமிழில் மிகவும் புலமைப் பெற்றவரும் மற்றும் இசையாசிரியருமான திருமதி. லலிதா பாரதி அம்மையார் அவர்கள் (94) வயது முதிர்வின் காரணமாக இன்று (26.12.2022) இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவு தமிழுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in